# கீழக்கரை நகர்மன்ற 31.07.2020—ம் தேதிய கூட்டத்தின் நடவடிக்கைகள்

**பொருள்: 1**

கீழக்கரை நகராட்சி பராமரிப்பில் உள்ள வார்டு எண்.1 புதிய பேருந்து நிலைய பின்புறம் உள்ள மாட்டுக் கொட்டகை, வார்டு எண்.16 புதுக்குடி மற்றும் வார்டு எண்.21 தட்டான்தோப்பு ஆகிய இடங்களில் அமைந்துள்ள கழிவு நீரேற்று நிலையத்தில் உள்ள மின்மோட்டார்/ஆயில் என்ஜின்களை 01.08.2020 முதல் 31.01.2021 வரை ஆறு மாதங்களுக்கு ஆறு நபர்களைக் கொண்டு வெளிக்கொணர்வு முறைப்படி (Outsourcing method) இயக்கும் பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு, மதிப்பீடு ரூ.6,40,000/—க்குரிய செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு இந்நகர் மன்றத்தில் 30.06.2020—ந் தேதி அனுமதி பெறப்பட்டு, அதன் அடிப்படையில் மேற்காணும் பணியினை செய்வதற்கு ஆறு நபர்கள் வழங்குவதற்கு 30.07.2020 அன்று வரப்பெற்ற கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப் புள்ளிகளை மன்றம் பார்வையிட்டு ஒப்புக்கொள்ளவேண்டிய விஷயம்

| வ. எண் | திட்டம்/ வேலையின் விபரம் | மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| **வருவாய் நிதி – 2020—2021** | | | | |
| 1. | கீழக்கரை நகராட்சி பகுதிகளில் அமைந்துள்ள மூன்று கழிவு நீரேற்று நிலையங்களில் உள்ள மின்மோட்டார் / ஆயில் என்ஜின்களை இயக்குதல் கழிவு நீர் தொட்டிகளைப் பராமரித்தல் பணி இரவு மற்றும் பகல் பணிக்கு இருவர் வீதம் 3 கழிவு நீரேற்று நிலையத்திற்கு ஆறு நபர்களைக் கொண்டு வெளிக் கொணர்வு முறைப்படி (Outsourcing method) பணி மேற்கொள்ளுதல். 01.08.2020 முதல் 31.01.2021 வரை ஆறு மாதங்களுக்கு பணி செய்வதற்கு ஆறு நபர்கள் வழங்குதல் | 6.40 | 1) M/s. எவர்கிரீன் என்விரான்மென்ட் சர்வீசஸ், 15, லெட்சுமி காம்ப்ளக்ஸ், இரயில்வே பீடர் ரோடு, இராமநாதபுரம்.<br>2) M/s. எக்ஸர்நெட், 8, கல்பாலம் ரோடு கோரிப்பாளையம், மதுரை. | ரூ.6,27,782/— மதிப்பீட்டு தொகைக்கு 0.19% குறைவு<br>ரூ.6,41,088/— மதிப்பீட்டு தொகைக்கு 1.92% அதிகம் |

**(ந.க.எண். 272/2020/இ1)**

**அலுவலகக் குறிப்பு:**

மேற்காணும் பணிக்கு 0.19 சதவீதம் மதிப்பீட்டை விட (ஒரு நபருக்கு ரூ.519/— மற்றும் 12 சதவீதம் நிர்வாக செலவினங்கள்) குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s. எவர் கிரீன் என்விரான்மென்ட் சர்வீசஸ், இராமநாதபுரம் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

## தீர்மானம் எண்.755 அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள்: 2</u>**

இந்நகராட்சி தெரு விளக்கு பராமரிப்பு, குடிநீர் மின்மோட்டார் மற்றும் கழிவு நீர் மின்மோட்டர்கள்/ ஆயில் என்ஜின்களை 01.08.2020 முதல் 31.01.2020 வரை ஆறு மாதங்களுக்கு ஒரு நபரைக் கொண்டு வெளிக்கொணர்வு முறைப்படி (Outsourcing method) பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு, மதிப்பீடு ரூ.1,01,000/—க்குரிய செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு இந்நகர் மன்றத்தில் 30.06.2020—ந் தேதி அனுமதி பெறப்பட்டு, அதன் அடிப்படையில் மேற்காணும் பணியினை செய்வதற்கு ஒரு நபர் வழங்குவதற்கு 30.07.2020 அன்று வரப்பெற்ற கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் பார்வையிட்டு ஒப்புக்கொள்ளவேண்டிய விஷயம்.

| வ. எண் | திட்டம்/ வேலையின் விபரம் | மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| **<u>வருவாய் நிதி – 2020–2021</u>** | | | | |
| 1. | கீழக்கரை நகராட்சி தெருவிளக்குகள் பராமரிப்பு, குடிநீர் மற்றும் கழிவு நீரேற்று நிலையங்களில் உள்ள மின்மோட்டர்கள் / ஆயில் என்ஜின்கள் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல். 01.08.2020 முதல் 31.01.2021 வரை ஆறு மாதங்களுக்கு பணி செய்வதற்கு வெளிக்கொணர்வு முறைப்படி (Outsourcing method) ஒரு நபர் வழங்குதல் | 1.01 | 1) M/s. எவர்கிரீன் என்விரான்மென்ட் சர்வீசஸ், 15, லெட்சுமி காம்ப்ளக்ஸ், இரயில்வே பீடர் ரோடு, இராமநாதபுரம்.<br>2) M/s. எக்ஸ்லர்நெட், 8, கல்பாலம் ரோடு கோரிப்பாளையம், மதுரை. | ரூ.99,994/— மதிப்பீட்டு தொகைக்கு 0.20% குறைவு<br>ரூ.1,00,800/— மதிப்பீட்டு தொகைக்கு 0.60% அதிகம் |

**<u>(ந.க.எண்.261/2020/இ1)</u>**

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

மேற்காணும் பணிக்கு 0.20 சதவீதம் மதிப்பீட்டை விட (ஒரு நபருக்கு ரூ.496/— மற்றும் 12 சதவீதம் நிர்வாக செலவினங்கள்) குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s. எவர் கிரீன் என்விரான்மென்ட் சர்வீசஸ், இராமநாதபுரம் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

**<u>தீர்மானம் எண்.756 அனுமதிக்கப்பட்டது.</u>**

**பொருள்: 3**

இராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரை வட்டம், ஏர்வாடி கிராமம் காட்டுப்பள்ளியில் தங்கியிருக்கும் கேரளா மற்றும் அனைத்து மாவட்டங்களை சேர்ந்த சுமார் 700க்கும் மேற்பட்ட ஆதரவற்றோர் மற்றும் மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு, கோவிட்–19 விழிப்புணர்வு மற்றும் தடுப்பு நடவடிக்கைக்காக ஊரடங்கு அமலில் உள்ள நிலையில், உணவின்றி தவித்து வருவதால் கீழக்கரை நகர் பகுதியில் அமைந்துள்ள அம்மா உணவகத்தில் தினசரி உணவு கட்டணங்கள் செலுத்தி மேற்கண்ட நபர்களுக்கு உணவுகள் தயார் செய்து வழங்குமாறு கீழக்கரை, நிஷா பவுன்டேசன் 24.03.2020 மற்றும் 31.03.2020–ந் தேதிய விண்ணப்பம் மற்றும் இராமநாதபுரம் உதவி ஆட்சியர் அவர்களின் ந.க.அ9/1963/2020, நாள். 11.04.2020ந்தேதிய உத்திரவின்படி இந்நகராட்சி அம்மா உணவகத்தில் உணவுகள் தயார் செய்து வழங்குவதற்கு தேவையான காய்கறி வகைகளை தினசரி உள்ளுர் விலை விகிதத்தில் வாங்கி பயன்படுத்துமாறு, இந்நகராட்சி அம்மா உணவக பொறுப்பு அலுவலர் / பணி மேற்பார்வையாளர் திரு. ஆர். சிவசங்கர் அவர்களுக்கு உத்திரவு வழங்கப்பட்டது. அதன்படி இந்நகராட்சி அம்மா உணவகத்தில் 01.06.2020 முதல் 30.06.2020 வரை சமையல் செய்வதற்கு தேவையான காய்கறி வகைகளை வாங்கி கொடுத்த வகைக்கு ரூ.1,32,945/– மட்டும் வழங்க கோரியுள்ளார்.

| வ.எண். | நாள் | தயார் செய்த உணவு வகை | | காய்கறிகள் வாங்கிய அளவு கிலோ/கிராம் | தொகை |
|---|---|---|---|---|---|
| | | இட்லி சாம்பார் | சாதம் | | |
| 1. | 01.06.2020 | 2400 | 1300 | 111.500 | 5730 |
| 2. | 02.06.2020 | 2400 | 1300 | 111.600 | 6035 |
| 3. | 03.06.2020 | 2400 | 1300 | 111.500 | 5825 |
| 4. | 04.06.2020 | 2400 | 1300 | 111.600 | 4995 |
| 5. | 05.06.2020 | 2400 | 1300 | 111.600 | 5015 |
| 6. | 06.06.2020 | 2400 | 1300 | 111.600 | 5970 |
| 7. | 07.06.2020 | 2400 | 1300 | 111.600 | 5145 |
| 8. | 08.06.2020 | 0 | 0 | 0.000 | 0 |
| 9. | 09.06.2020 | 0 | 0 | 0.000 | 0 |
| 10. | 10.06.2020 | 0 | 400 | 35.000 | 1840 |
| 11. | 11.06.2020 | 2400 | 1150 | 105.500 | 5500 |
| 12. | 12.06.2020 | 2000 | 800 | 80.600 | 3670 |
| 13. | 13.06.2020 | 2000 | 800 | 80.500 | 4365 |
| 14. | 14.06.2020 | 2000 | 800 | 80.500 | 4355 |
| 15. | 15.06.2020 | 2000 | 800 | 80.600 | 4935 |
| 16. | 16.06.2020 | 2000 | 800 | 80.600 | 4475 |
| 17. | 17.06.2020 | 2000 | 800 | 80.500 | 4905 |
| 18. | 18.06.2020 | 2000 | 800 | 80.500 | 4555 |
| 19. | 19.06.2020 | 2000 | 800 | 80.500 | 4450 |
| 20. | 20.06.2020 | 2000 | 800 | 80.500 | 4505 |
| 21. | 21.06.2020 | 2000 | 800 | 80.500 | 4505 |
| 22. | 22.06.2020 | 2000 | 800 | 80.500 | 4745 |
| 23. | 23.06.2020 | 2000 | 800 | 80.500 | 4495 |
| 24. | 24.06.2020 | 2000 | 800 | 80.500 | 4925 |
| 25. | 25.06.2020 | 2000 | 800 | 80.500 | 4495 |
| 26. | 26.06.2020 | 2000 | 800 | 80.500 | 4955 |
| 27. | 27.06.2020 | 2000 | 800 | 80.500 | 4395 |
| 28. | 28.06.2020 | 2000 | 800 | 80.500 | 4870 |
| 29. | 29.06.2020 | 2000 | 800 | 80.500 | 4415 |
| 30. | 30.06.2020 | 2000 | 800 | 80.500 | 4875 |
| மொத்தம் | | **57200** | **25850** | **2451.3** | **132945** |

மேற்காணும் விவரப்படியான தொகை ரூ.1,32,945/— மட்டும் இந்நகராட்சி அம்மா உணவக பொறுப்பு அலுவலர் / பணி மேற்பார்வையாளர் திரு.ஆர். சிவசங்கர் அவர்களுக்கு காசோலை மூலம் வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலக குறிப்பு**</u>

1. இந்நகராட்சி அம்மா உணவகத்தில் 01.06.2020 முதல் 30.06.2020 வரை சமையல் செய்வதற்கு தேவையான காய்கறி வகைகளை தினசரி வாங்கி கொடுத்த வகைக்கு அம்மா உணவக பொறுப்பு அலுவலர் / பணி மேற்பார்வையாளர் திரு.ஆர். சிவசங்கர் அவர்களுக்கு ரூ.1,32,945/— வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

2. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

<u>**தீர்மானம் எண்.757 அனுமதிக்கப்பட்டது.**</u>

<u>**பொருள்: 4**</u>

இராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரை நகராட்சி பொதுசுகாதாரம் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் அனைத்து பகுதிகளிலும் தனியார் மூலம் குப்பை சேகரிக்க நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் உத்திரவு ந.க.எண்.6819/2017/பி3 நாள்.14.03.2018—ன்படி தனியார் மூலம் பணிகள் பார்த்திட ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு இவ்வலுவலக செயல்முறை ஆணை உத்திரவு ந.க.எண்.1528/2017எச்1, நாள்.03.08.2018—ன்படி மதுரை எக்ஸெர்நெட் நிறுவனத்திற்கு 03.08.2019 முதல் 02.08.2020 வரை ஓராண்டிற்கு பணி உத்திரவு வழுங்கப்பட்டு தற்போது வரை பணிகள் பார்க்கப்பட்டு வருகிறது. மேற்படி நிறுவனத்திடமிருந்து தொடர்ந்து பணி மேற்கொள்ள விண்ணப்பம் வரப்பெற்றுள்ளது. அதனை தொடர்ந்து நகராட்சி பொதுசுகாதார நலன் கருதி மதுரை எக்ஸெர்நெட் நிறுவனத்திற்கு தொடர்ந்து 03.08.2020 முதல் 02.08.2021 வரை ஓராண்டிற்கு பணி நீட்டிப்பு செய்ய உத்திரவு வழுஙக இவ்வலுவலக துப்புரவு ஆய்வாளரால் குறிப்பு வழஙகப்பட்டுள்ளது. துப்புரவு ஆய்வாளரால் வழஙகப்பட்ட குறிப்புரையின்படி மேற்படி நிறுவனத்திற்கு ஓராண்டிற்கு பணிநீடிப்பு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண் 1528/2017/எச்1)

அலுவலக குறிப்பு

1. பொதுசுகாதாரப் பணி அவசர அவசியம் கருதி தனியார் மூலம் குப்பை சேகரிக்கவும் அதற்கான செலவினஙகளை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

2. துப்புரவு ஆய்வாளர் குறிப்புரையின்படி மதுரை எக்ஸெர்நெட் நிறுவனத்திற்கு 03.08.2020 முதல் 02.08.2021 வரை ஓராண்டிற்கு பணிநீடிப்பு செய்யலாம்.

<u>**தீர்மானம் எண்.758 அனுமதிக்கப்பட்டது.**</u>

<u>பொருள்: 5</u>

இந்நகர்மன்ற 30.06.2020–ந்தேதிய அனுமதியின்படி, கீழக்கரை நகராட்சி நிர்வாகத்தினால் வசூல் செய்யப்பட்டு வரும் கட்டிட உரிமையாணை மற்றும் அனுமதி கட்டணங்களில் உயர்வு செய்யப்பட்ட திருத்த அறிவிக்கையினை செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர், இராமநாதபுரம் அலுவலகத்தின் மூலமாக 23.07.2020 அன்று தினத்தந்தி நாளிதழ் வாயிலாக பிரசுரம் செய்ததற்கு பட்டியல் எண்.MDU 2021–0002970, நாள்.23.07.2020–ன்படி விளம்பரக் கட்டணம் ரூ.83,160/– (இதர வரிகளுடன்) செலுத்த மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.1537/2015/இ2)**

<u>அலுவலகக் குறிப்பு:</u>

மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.759 அனுமதிக்கப்பட்டது.</u>**

**ஒம்/– ஆ. தனலெட்சுமி,பி.காம்**
**தனி அலுவலர் / ஆணையாளர்(பொ)**
**கீழக்கரை நகராட்சி.**

**/ உண்மை நகல் /**

**ஆணையாளர் (பொ)**
**கீழக்கரை நகராட்சி.**